

# ஜி 20 மாநாட்டில் பங்கேற்க பிரதமர் வெளிநாடு பயணம்

# தேசிய அளவிலான ட்ராக் சைக்கிளிங் போட்டி துவக்கம்

# துணை முதல்வர் தலைமையில் நாளை 48 ஜோடிக்கு திருமணம்




# மாலை எக்ஸ்பிரஸ்



Email: maalaiexpresspdy@gmail.com



• 16-11-2024 சனிக்கிழமை •வெளியூர்: 17-11-2024 ஞாயிற்றுக்கிழமை •பக்கம் 6 • ரூ.600 காசுகள்

SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
इंडियनऑयल IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007


# மாலை எக்ஸ்பிரஸ்

MAALAI EXPRESS

மாநிலம் பயனுற!

குரோதி வருடம் ஐப்பசி 30 | ஹிஜிரி 1446 ஜமாதுல் அல்வல் 13


மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

● புதுச்சேரி ● சனிக்கிழமை, நவம்பர் 16, 2024 ● வெளியூர்: 17-11-2024, ஞாயிற்றுக்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 129 ● 6 பக்கம் ● ரூ.6

# தேசிய அளவிலான 'ட்ராக் சைக்கிளிங்' போட்டி

## துணை முதல்வர் உதயநிதி தொடங்கி வைத்தார்

திருப்போரூர், நவ.16-

வண்டலூர் அடுத்த மேலக்கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்ல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் தேசிய அளவிலான ட்ராக் சைக்கிளிங் போட்டியை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

19ந்தேதி வரை நடைபெறும் இப்போட்டிகளில் 28 மாநிலங்கள் 8 யூனியன் பிரதேசங்களை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட சைக்கிள் வீரர்கள் கலந்து கொள்கின்றனர். விழாவில் தமிழ்நாடு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, அமைச்சர் தா.மோ. அன்பரசன், காஞ்சிபுரம் எம்.பி.செல்வம், செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் அருண்ராஜ், திருப்போரூர் ஒன்றிய குழு தலைவர் எல். இதயவர்மன், ஒன்றிய குழு துணை தலைவர் சத்யா சேகர், தெற்கு ஒன்றிய செயலாளர் பையனூர் சேகர், மேலக்கோட்டை ஊராட்சி மன்ற தலைவர் கௌதமி ஆறுமுகம், ஒன்றிய குழு உறுப்பினர்கள் சுரேஷ், அருண்குமார். திருப்போரூர் பேரூ ராட்சி தலைவர் தேவ ராஜ், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் எக்ஸ் பிரஸ் எல்லப்பன், ஊராட்சி மன்ற தலைவர்கள் ராணி எல்லப்பன், தாரா சுதாகர், மகாலட்சுமி ராஜாராம், புதுப்பாக்கம் ஆறுமுகம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வந்த துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு திருப்போரூர் ஒன்றிய தி.மு.க. சார்பில் ஒன்றிய குழு தலைவர் எல்.இதய வர்மன் தலைமையில் மேலக் கோட்டையூர் எல்லையில் இருந்து பூக்கள் தூவி சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இதில் ஏராளமான தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



## ஜி20 மாநாட்டில் பங்கேற்க பிரதமர் மோடி இன்று வெளிநாடு பயணம்

புதுடெல்லி, நவ.16-

பிரதமர் நரேந்திர மோடி இன்று முதல் 21ந்தேதி வரை நைஜீரியா, பிரேசில், கயானா ஆகிய 3 நாடுகளுக்கு 6 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.



நைஜீரியா அதிபர் போலா அகமது தினுபு அழைப்பின் பேரில் பிரதமர் நரேந்திர மோடி இன்று அந்நாட்டுக்கு அரசுமுறை பயணமாக செல்கிறார்.

17 ஆண்டுகளுக்குப் பிறகு நைஜீரியா செல்லும் முதல் இந்திய பிரதமர் என்ற பெருமை அவருக்கு கிடைக்கும். இந்த பயணத்தின் போது அங்கு வசிக்கும் இந்தியர்களை அவர் சந்தித்து பேச உள்ளார். நாளை அந்நாட்டு அதிபர் போலா அகமது தினுபுவை சந்தித்து இருதரப்பு உறவை பலப்படுத்துவது குறித்து பேசுகிறார்.

நைஜீரியா பயணத்தை முடித்துக் கொண்டு பிரேசில் செல்லும் மோடி ரியோ டி ஜெனிரோ நகரில் 18ந்தேதி தொடங்கும் ஜி20 உச்சி மாநாட்டில் பங்கேற்கிறார். இந்த மாநாட்டுக்கு பிரேசில் அதிபர் லுயிஸ் இனாசியோ லுலா டா சில்வா தலைமை தாங்குகிறார்.இந்த மாநாட்டில், நீடித்த வளர்ச்சி, பொருளாதார ஸ்திரத் தன்மை உள்ளிட்ட சர்வதேச விவகாரங்களில் இந்தியாவின் நிலைப்பாட்டை பிரதமர் மோடி எடுத்துரைக்கிறார். இந்த மாநாட்டுக்கு இடையே, பிரேசில் அதிபர் உட்பட பல்வேறு உலக தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

இது அவரது 3வது பிரேசில் பயணமாகும். இதற்கு முன்பு 2014 மற்றும் 2019ல் பிரேசில் சென்று இருந்தார்.

அதை தொடர்ந்து, கயானா அதிபர் முகமது இர்பான் அலியின் அழைப்பை ஏற்று மோடி வரும் 19ந் தேதி அந்நாட்டுக்கு செல்கிறார். 20ந்தேதி அதிபர் இர்பான் அலியை சந்தித்துபேச உள்ளார்.

இதையடுத்து கயானா பாராளுமன்றத்தில் மோடி உரையாற்றுகிறார். அங்கு வசிக்கும் இந்திய வம்சாவளியினர் சந்திப்பு நிகழ்ச்சியிலும் பங்கேற்க உள்ளார். கடந்த 1968ம் ஆண்டுக்குப் பிறகு இந்திய பிரதமர் ஒருவர் கயானாவுக்கு செல்வது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. 21ந்தேதி அவரது கயானா பயணம் நிறைவடைகிறது.

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நாளை 48 ஏழை ஜோடிகளுக்கு திருமணம்

சென்னை, நவ.16-

சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் எளியோர் எழுச்சி நாள் கொண்டாடப்படுகிறது. இதையொட்டி 48 ஏழை ஜோடிகளுக்கு திருமண ஏற்பாடு செய்யப்பட்டது.

திருமண விழா நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணிக்கு வடசென்னை சுங்கச்சாவடியில் உள்ள தங்கம் மாளிகையில் நடைபெறுகிறது.

48 ஜோடிகளின் மண விழாவை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையேற்று நடத்தி வைக்கிறார். மணமக்களுக்கு சீர்வரிசை பொருட்களை வழங்கி வாழ்த்து கூறுகிறார். திருமண விழாவில் சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் வரவேற்புரை நிகழ்த்துகிறார்.

பகுதி செயலாளர்கள் லட்சுமணன், ஜெயதாஸ் பாண்டியன், சுரேஷ், செந்தில் குமார், ஜெயராமன், முருகன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

அமைச்சர்கள் பொன்முடி, பி.கே. சேகர்பாபு, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.எல்.ஏ.க்கள், ஜே.ஜே. எபினேசர், ஐட்ரீம் மூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

விழாவில் நிர்வாகிகள் இளைய அருணா, மனோகரன், இரா.கருணாநிதி, மதிவாணன், மருதுகணேசன், நரேந்திரன், வெற்றி வீரன், எஸ்.ஆர்.கமலக்கண்ணன், கோபி உள்ளிட்ட பலர் கலந்து கொள்கிறார்கள். முடிவில் வட்ட செயலாளர் என்.எம். கதிரேசன் நன்றி கூறுகிறார்.

## சீனியர் போலீஸ் சூப்பிரண்டு பதவியேற்பு

காரைக்கால், நவ.16-

காரைக்கால் மாவட்ட சீனியர் போலீஸ் சூப்பிரண்டு மணீஷ் அருணாச்சல பிரதேசத் திற்கு மாற்றலாகி சென்றதையடுத்து, காரைக்கால் மாவட்ட புதிய சீனியர் போலீஸ் சூப்பிரண் டாக, புதுச்சேரி யில் பணி யாற்றிய லட்சுமி சௌஜன்யா நேற்று காரைக்கால் சீனியர் போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் பதவியேற்றுக்கொண்டார்.



## தேசிய பத்திரிகை நாள்: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, நவ.16-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ்தள பதிவில் கூறியிருப்பதாவது:

தேசிய பத்திரிகை நாளில், உண்மையையும் பொறுப்புணர்வையும் உயர்த்திப் பிடிக்கும் ஊடகவியலாளர்களின் இடையறாத முயற்சிகளைப் போற்றுகிறோம்.

சகிப்பின்மை உயர்ந்து வரும் இக்காலத்தில், அவர்கள் காட்டும் நெஞ்சுரம்தான் மக்களாட்சியைக் காக்கும் இறுதி அரணாகத் திகழ்கிறது. விருப்பு, வெறுப்பு பீடிக்காமல் ஊடகவியல் விளங்க வேண்டும். அவ்வாறு விளங்கி, நமது மக்களாட்சியைக் காக்கும் குரல்களைக் காக்க உறுதியாகத் துணைநிற்போம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



## பவுர்ணமியையொட்டி திருவண்ணாமலையில் லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம்

திருவண்ணாமலை, நவ.16-

ஐப்பசி மாத பவுர்ணமியை முன்னிட்டு கிரிவலம் செல்வதற்கு பல லட்சம் பக்தர்கள் திருவண்ணாமலையில் குவிந்ததால் நகரமே திக்கு முக்காடியது. ஐப்பசி மாத பவுர்ணமி நேற்று காலை 5.40 மணிக்கு தொடங்கி இன்று அதிகாலை 3.33 மணிக்கு நிறைவு பெற்றது.

14 கிலோ மீட்டர் தூரம் உள்ள திருவண்ணாமலை அருணாசலேஸ்வரரை வலம் வருவதற்காகவும், அருணாசலேஸ்வரர் தரிசிக்கவும் நேற்று முன்தினம் இரவு முதலே பக்தர்கள் வரத் தொடங்கினர். வெயிலின் தாக்கம் இல்லாமல் அவ்வப்போது சாரல் மழையுடன் கூடிய இதமான சூழல் நிலவியது.

இதனால் நேற்று காலை முதலே பல்வேறு மாவட்டம் மற்றும் மாநிலங்களில் இருந்து வந்த பக்தர்கள் குடும்பம் குடும்பமாக அருணாசலேஸ்வரர் வலம் வந்தும், அருணாசலேஸ்வரரை கோவிலில் சாமி தரிசனம் செய்தும் சென்றனர்.

பக்தர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்க இரவு கிரிவலப் பாதை முழுவதும் பக்தர்கள் கூட்டம் அலை மோதியது. ஐப்பசி மாத பவுர்ணமி தினத்தில் சுமார் 15 லட்சம் பக்தர்கள் அருணாசலஸ்வரர் வலம் வந்து வழிபட்டனர்.

கட்டுக்கடங்காத பக்தர்கள் கூட்டத்தில் அருணாசலேஸ்வரர் கோவிலில் சாமிதரிசனம் செய்ய சுமார் 6 முதல் 7 மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் தரிசனம் செய்து சென்றனர்.

பக்தர்களின் தரிசன வரிசை கோவில் வளாகத்தை கடந்து பெரிய தெரு வரை நீண்டிருந்ததால் பக்தர்களுக்கிடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

கோவில் நிர்வாகம் சார்பில் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் முறையாக செய்யப்படவில்லை என சாமி தரிசனம் செய்ய வந்த பக்தர்கள் குற்றம்சாட்டினர்.

மேலும் இனி வரும் பவுர்ணமி நாட்களிலாவது கோவில் வளாகத்தில் உள்ள காலி இடங்களில் மேற்கூரை அமைத்து சாமி தரிசனம் செய்வதற்கான தரிசன வரிசையை அமைக்க வேண்டும் என்று பக்தர்கள் வலியுறுத்தினர்.

## புதுவை முதல்வர், அமைச்சர்கள் பத்திரிகையாளர் தின வாழ்த்து

புதுச்சேரி, நவ. 16-

புதுவை முதல்வர் ரங்கசாமி விடுத்துள்ள பத்திரிகையாளர் தின வாழ்த்து செய்தி: மக்களின் தேவைகளை அரசின் கவனத்திற்கும் அரசின் சேவைகளை மக்களிடமும் கொண்டு சேர்ப்பதன் மூலம் ஜனநாயக சமூகத்திற்கு ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் முக்கியப் பங்காற்றி வருகின்றனர். ஊடகவியலாளர்களின் உழைப்பைக் கௌரவிக் கும் விதமாகவும் ஊடகவிய லாளர்களின் சுதந்திரத்தையும், அவர்களின் கடமையையும் போற்றும் நாளாக மட்டு மல்லாது உண்மையை நிலைநாட்டுவதற்கான இந்தியாவின் உறுதிப் பாட்டை எடுத்துக்காட்டும் வகையிலும் ஆண்டுதோறும் நவம்பர் 10ஆம் நாள் தேசிய பத்திரிகையாளர் தினமாகக் கொண்டாடப் படுகிறது.



நேரம் காலம் பாராது மழை புயல் போன்ற பேரிடர் காலங்களிலும் தங்களின் பணியைச் செவ்வனே மேற்கொண்டு வரும் ஊடகவியலாளர் களின் நலனின் மீது எனது அரசிற்கு எப்போதும் மிகுந்த அக்கறை உண்டு அவர்களின் நலன் காக்க எனது அரசு என்றென்றும் துணை நிற்கும். நவீன தொழில்நுட்பங்களின் வருகையினால் நிகழும் மாற்றங்கள் ஊடகத் துறையில் புதிய பரிமாணங் களை கொண்டுவந்து சேர்த்துள்ளது. ஊடகத் துறையில் நாளுக்குநாள் ஏற்பட்டு வரும் வளர்ச்சிக்கு ஏற்ப பத்திரிகையாளர்கள் தங்களைத் தகவமைத்துக் கொண்டு தங்கள் பணியில் முன்னேற்றம் காண வேண்டும் என்று கூறி ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் எனது தேசிய பத்திரிகையாளர் தின நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அமைச்சர் நமச்சிவாயம்: ஜனநாயகத்தைக் கட்டிக் காப்பதில் முக்கியப் பங்காற்றும் ஊடகம் மற்றும் பத்திரிகை துறை நண்பர்கள் அனைவருக்கும் தேசிய பத்திரிகை தின வாழ்த்துக்களை தெரிவித் துக் கொள்கிறேன். ஜனநாயகத்தின் நான்காவது தூணாக விளங்கும் பத்திரிகை குரலற்றவர்களின் குரலாய், உண்மையை உரக்கச் சொல்லி, சமூக முன்னேற்றத்திற்கு பெரும்பங்காற்றி வருகிறது. இந்த பங்களிப்பை நினைவு கூறும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 16 ஆம் தேதி தேசிய பத்திரிகை தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

துணிவுடன் அறம் காக்க போராடும் பத்திரிகை மற்றும் ஊடங்கங்களின் பங்களிப்பு அளப்பரியது. உண்மை நிகழ்வுகளை மக்களுக்கு நடுநிலையோடு எடுத்துரைத்து ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட நம் புதுச்சேரி அரசு செயல் படுத்தி வரும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்த்து, மக்களுக்கும் அரசிற்கும் பத்திரிகைத் துறை பாலமாக விளங்கி வருகிறது. நேர்மையும் நெறியும் தவறாது பணி யாற்றும் பத்திரிகை யாளர்கள் அனைவருக்கும் மீண்டும் ஒரு முறை தேசிய பத்திரிகை தின வாழ்த்துக் களை மகிச்சியுடன் தெரிவித்து கொள்கிறேன்.

அமைச்சர் பிஆர்என் திருமுருகன்: இந்திய நாட்டின் பன்முக கலாச்சாரம், பண்பாடு, கலை இலக்கியங்கள் மட்டுமின்றி, இந்திய ஜனநாயகத்தை போற்றி பாதுகாப்பதில் பத்திரிக்கை மற்றும் ஊடகங்களின் பங்கு மகத்தானது.

அரசின் மக்கள் நலன் சார்ந்த செயல் திட்டங்கள் மக்களை எளிதில் சென்றடைந்து, மக்களின் வளர்ச்சியோடு தேசத்தின் வளர்ச்சியை அன்றாடம் சமுகத்திற்கு கொண்டு செல்லும் பத்திரிகைகள், வானொலி மற்றும் தொலைக்காட்சி ஊடகங் களை பாராட்டும் அதே நேரம் இவற்றில் இரவு பகல் பாராது பணியாற்றும் அனைத்துப் பிரிவு ஊடகவியலாளர்களையும் இந்த இனிய நாளில் வாழ்த்துவதில் பெருமைப் படுகிறேன். இனிவரும் நாட்களிலும் பத்திரிக்கை மற்றும் இதர ஊடகங்களின் சமூக கடமை என்பது அரசுக்கும் மக்களுக்குமான பாலமாய் இருந்து, குறைகளை சுட்டிக்காட்டும் அதே நேரம், மக்களுக்காக அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களையும் அது தரும் நிறைவையும் நடுநிலையோடு எடுத்துக்கூற வேண்டும் என்பது எனது அன்பான வேண்டுகோள்.

பெருமை மிக்க இந்திய ஜனநாயகத்தின் நான்காவது தூணாக விளங்கும் பத்திரிக்கைகள், வானொலி, தொலைக் காட்சி போன்றவை தங்களது கடமையை நேர்மையின் வழியில் நின்று, நியாயத்தை நிலைநாட்ட தொடர்ந்து தங்களது பங்களிப்பை வழங்கிட வேண்டும் என்ற அன்பான வேண்டுகோளுடன் உங்கள் அனைவரையும் இந்த நாளில் மனதார வாழ்த்துகிறேன்.

### கம்பைநல்லூர் அருகே பரபரப்பு

# பழுதடைந்த பள்ளி கட்டிடத்தை அகற்ற கோரிமாணவர்கள், பெற்றோர்கள் போராட்டம்



**தருமபுரி, நவ. 16–**

தர்மபுரி மாவட்டம், மொரப்பூர் ஊராட்சி ஒன்றியம், கம்பைநல்லூர் அருகே உள்ளது வெதரம் பட்டி. இந்த கிராமத்தில் அரசு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி செயல் பட்டு வருகிறது. இந்தப் பள்ளியில் 1 ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை 86 மாணவர்களும், 72 மாணவிகளும் என மொத்தம் 158 பேர் படித்து வருகின்றனர். இந்தப் பள்ளி கட்டிடம் பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதால் நாளடை வில் சேதம் அடைந்து உள்ளது. இதனால் மழைக்காலங்களில் பள்ளிக்கட்டிடத்தின் மேல் பகுதியில் மழைநீர் குளம் போல் தேங்கி நிற்பதால் மழைநீர் கசிந்து வகுப் பறைகள் தண்ணீர் வருவ தும், பள்ளி கட்டடத்தின் முன் பகுதியில் காரைகள் பெயர்ந்து கம்பிகள் எழும்புக் கூடாக காட்சியளிக்கிறது. எனவே இந்த பள்ளி கட்டிடத்தை அகற்றிவிட்டு புதிய கட்டிடம் கட்ட வேண்டும் என பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் நீண்ட காலமாக அரசுக்கு கோரிக்கை விடுத்து வந்த னர். ஆனால் இதுவரை பள்ளி கட்டிடம் கட்ட வில்லை. இந்த நிலையில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதால்பள்ளிக்கட்டிடத் தின் மேல் பகுதியில் தண்ணீர் குளம்போல் தேங்கி நிற்பதால் பள்ளி வகுப்பறைக்குள் மாணவர் கள் கல்வி பயல போதிய பாதுகாப்பு இல்லாத காரணத்தால் புதிய பள்ளி கட்டிடம் கட்டும் வரை தங்களது பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்ப மாட் டோம் என வலியுறுத்தி நேற்று காலை பள்ளி வளாகம் முன்பு பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் முற்றுகையிட்டனர். இதுகுறித்து தகவல் அறிந்ததும் கம்பைநல்லூர் பேரூராட்சி தலைவர் த.வடமலை முருகன், பேரூராட்சி உதவி இயக்குனர் எஸ்.கணேஷ், மாவட்ட கல்வி அலுவலர் சின்னமாது, காரிமங்கலம் வட்டாட்சியர் கோவிந்த ராஜ், மொரப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர் மணிவண்ணன், மொரப்பூர் வட்டார கல்வி அலுவலர் கணேசன், கம்பைநல்லூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் காளியப்பன், கம்பை நல்லூர் பேரூராட்சி உறுப்பினர் எம்.ஆதிமூலம் மற்றும் அதிகாரிகள் பள்ளி மேலாண்மை குழு தலைவி கீதா ஆதிமூலம் மற்றும் பெற்றோர்கள், பொது மக்களிடம் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர். அப்போது புதிய பள்ளி கட்டிடம் கட்ட விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். அதுவரை சிமெண்ட் சீட் கூரை அமைத்து தற்காலிக பள்ளி வகுப்பறை ஏற்படுத்தப்படும் என உறுதி அளித்தனர். இந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து பள்ளி மாணவ, மாணவிகள் மதியத்திற்கு மேல் பள்ளிக்கு வகுப்பிற்கு சென்றனர்.

இந்த சம்பவத் தால் இந்த பகுதியில் பெரும் பரபரப்பாக காணப்பட்டது. மேலும் இதுகுறித்து அதிகாரிகள் கூறும்போது, வெரதரம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதால் பேரூராட்சி நிர்வாகத்தின் சார்பில் புதிய கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்க முடியவில்லை. இதுகுறித்து உயர் அதிகாரிகள் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு உள்ளது. அதன்படி புதிய கட்டிடம் கட்ட விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். அதுவரை மாணவ, மாணவர்களுக்கு தற்காலிக சிமெண்ட் கூரை அமைத்து வகுப்புகள் நடத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தனர்.

# அரசு உதவி பெறும் பள்ளிகளில் கலைத்திருவிழா



**ராமநாதபுரம், நவ. 16–**

தமிழ்நாடு முதலமைச்சர், தமிழ்நாடு துணை முதலமைச்சர், பள்ளி கல்வித்துறை அமைச்சர் உத்தரவின்படி பள்ளி கல்வித்துறை இயக்குனர், ஒருங்கிணைந்த பள்ளி மாநிலத் திட்ட இயக்குன ரின் வழிபாட்டு தலின்படி, சூழல் பாதுகாப்பு அனை வரின் பொறுப்பு என்ற தலைப் பின் கீழ் ராமநாத புரம் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளை சேர்ந்த 1 முதல் 12ம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு மாவட்ட அளவிலான கலைத் திருவிழா போட்டிகள் நடைபெற்று வருகிறது. ராமநாதபுரம் நேஷனல் அகாடமி மெட்ரிக் மேல் நிலைப் பள்ளியில் நடைபெற்ற துவக்க விழாவில், மாவட்ட வருவாய் அலுவலர் குத்து விளக்கு ஏற்றி வைத்தார். முதன்மை கல்வி அலுவலர் சின்னராசு தலைமை வகித்தார். மாவட்ட கல்வி அலுவலர் கள் ஆரோக்கியராஜ், சேதுராமு, ரவி, அலுவலர் நேர்முக உதவியாளர்கள் ரவீந்திரன், கர்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒருங்கிணைந்த பள்ளி கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் நிகழ்ச்சிக்கான ஏற்பாடு களை செய்து இருந்தனர். தலைமை ஆசிரியர்கள், வட்டார கல்வி அலுவலர் கள், வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள், ஆசிரியர்கள், பயிற்றுநர்கள் மற்றும் அலுவலர்கள் பணியாளர்கள் நிகழ்ச்சி களை ஒருங்கிணைத்தனர். கலைத்திறன் உள்ள ஆசிரியர்கள், சிறப்பு ஆசிரியர்கள் போட்டி களுக்கு நடுவர்களாக செயல்பட்டனர். கீழக்கரை முகமது சதக் பொறியியல் கல்லூரியில் 14 –11 – 2024 முதல் 18 –11 –2024 வரை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் ஒன்பதாம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு மாணவர்களுக்கு போட்டிகள் நடைபெற்று வருகிறது. 18 –11 –2024 அன்று அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் ஒன்பது முதல் 12ஆம் வகுப்பு மாணவர் களுக்கான கலைத் திருவிழா போட்டிகள் நடைபெற உள்ளது. மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். மாவட்ட அளவில் முதலி டம் பெறும் மாணவர்கள் மேல்நிலைப் போட்டியான மாநில அளவிலான போட்டி தேர்வு செய்யப்பட உள்ளனர்.

## தலையங்கம்

## மாலை எக்ஸ்பிரஸ்

16.11.2024 (சனிக்கிழமை)

# வரப்பிரசாதம்

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்களுக்கு ரோல் மாடலாக திகழ்ந்து 'முதல்வன்' ஆக நிற்கிறார். சென்னை கொளத்தூர் தொகுதியில் இருந்து தொடர்ந்து 3வது முறையாக எம்.எல்.ஏ.வாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், கடும் பணிச்சுமைக்கு மத்தியிலும் தொகுதி மக்களை என்றும் மறப்பதில்லை. அடிக்கடி தொகுதிக்கு சென்று மக்களை சந்தித்து குறைகளை கேட்டு நிவர்த்தி செய்து வருகிறார். நிறைய பேரை பெயர் சொல்லி அழைக்கும் அளவுக்கு தொகுதிக்கு பரிச்சயம் ஆகியுள்ளார்.

அந்த வகையில், சமீபத்தில் கொளத்தூர் தொகுதியில் ரூ.2.85 கோடி செலவில் 'முதல்வர் படைப்பகம்' என்று கூறப்படும் ஒரு பகிர்ந்த பணியிடம் மற்றும் கல்வி மையத்தை திறந்து வைத்துள்ளார். தரைத்தளம் மற்றும் 2 தளங்களைக்கொண்ட கட்டிடத்தில் இயங்கும் 'முதல்வர் படைப்பகம்' முதல்அமைச்சர் சிந்தையில் உதித்த புதிய திட்டமாகும். அனைத்து தளங்களும் குளுமை வசதி செய்யப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல், நல்ல இருக்கை வசதிகள், 'வைபை' வசதியும் இலவசமாக வழங்கப்படுகிறது. தரைத்தளம் பகிர்ந்த பணியிட மையமாக செயல்படுகிறது. இந்த தளத்தில் புத்தாக்க தொழிலை தொடங்கியுள்ளவர்கள், மென்பொருள் உள்ளிட்ட பல தொழில்களை தொடங்கியுள்ளவர்கள், 'புதிதாக தொழிலை தொடங்கியுள்ளோம். ஆனால், அதற்காக தனி அலுவலகம் அமைக்க நிதி வசதி இல்லை' என்ற நிலையில் இருப்பவர்கள் இங்கு அமர்ந்து அமைதியாக தங்கள் பணிகளை செய்ய முடியும்.

ஒரே நேரத்தில் 38 பேர் இந்த தளத்தில் அமர்ந்து தங்கள் வேலைகளைப்பார்க்க முடியும். 4 மற்றும் 6 பேர் அமர்ந்து கூட்டங்கள் நடத்தும் வகையில், 3 ஆலோசனை கூடங்கள் உள்ளன. இந்த பகிர்ந்த பணியிடத்தை ஒருவர் அரை நாள் பயன்படுத்த ரூ.50, ஒரு நாளுக்கு ரூ.100, மாதம் முழுவதும் பயன்படுத்த ரூ.2,500 கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. முதல் தளம் கல்வி மையமாக செயல்படுகிறது. இங்கு பல்வேறு போட்டி தேர்வுக்காக தயாராகிக் கொண்டிருக்கும் இளைஞர்களுக்காக ஆயிரக்கணக்கில் புத்தகங்கள் இருக்கின்றன. இணையத்தில் தகவல் தேட 3 கம்ப்யூட்டர்களும் உள்ளன. மேலும், தங்கள் பாடங்களை படிக்கும் பள்ளிக்கூட, கல்லூரி மாணவர்களும் இதை பயன்படுத்திக்கொள்ளலாம். தினமும் 5 ஷிப்டுகளில் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இரண்டரை மணி நேரத்துக்கும் ரூ.5 கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

இரண்டாவது தளத்தில் தேநீர் மற்றும் உணவு அருந்தும் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. 'முதல்வர் படிப்பகம்' காலை 6 மணி முதல் இரவு 11 மணி வரை திறந்திருக்கிறது. புதிதாக தொழில் தொடங்குபவர்களுக்கும், வீட்டில் இருந்து வேலை செய்பவர்களுக்கும், போட்டி தேர்வில் கலந்து கொள்பவர்களுக்கும், கல்லூரிகளில் படிப்பவர்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இதை பயன்படுத்துபவர்களெல்லாம் இதை தங்கள் முன்னேற்றத்துக்கான படிக்கல் என்றே நினைக்கிறார்கள். கொளத்தூர் தொகுதியில் அமைத்திருப்பதைப்போல, அனைத்து தொகுதிகளிலும் இந்த முதல்வர் படைப்பகத்தை தொடங்கினால், ரொம்ப நல்லது என்ற கோரிக்கை இளைய சமுதாயத்தினரிடம் இருக்கிறது.

# கோவை ஆர்எஸ்புரம் பகுதியில் அதிநவீன 64 கண்காணிப்பு கேமரா பொருத்தம்



**கோவை, நவ. 16–**

கோவை ஆர்எஸ்புரம் பகுதியில் ராஜஸ்தானி சங்கம் பங்களிப்புடன் புதியதாக அதிநவீன 64 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. கேமராவில் பகலில் உருவங்கள் துல்லியமாக தெரிவதைப்போல் இரவு நேரங்களிலும் துல்லியமாக தெரியும். மேலும் பேசுவது முதற்கொண்டு துல்லியமாக பதிவாகும் வகையில் அதிநவீன கேமராக்கள் பொருத்தப் பட்டு கண்காணிப்பு அறை திறப்பு விழா நடைபெற்றது. இதனை மாநகர காவல் ஆணையாளர் பாலகிருஷ் ணன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு திறந்து வைத்தார். கோவை மாநகர காவல் ஆணையாளராக பாலகிருஷ்ணன் பொறுப் பேற்ற நாள் முதல் தற்போது வரை பல்வேறு திட்டங் களை செயல்படுத்தி வரு கின்றார். குறிப்பாக ஓடவும் முடியாது ஒளியவும் முடியாது என்பதற்காக கோவை மாநகர் முழுவதும் 100 மீட்டருக்கு ஒரு கண்காணிப்பு கேமரா என்கிற அளவில் பல்வேறு பகுதிகளில் கேமரா பொருத்தும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

கல்லூரி மாணவிகள் பயன்பெறும் வகையில் போலீஸ் அக்கா திட்டம் போக்குவரத்து நெரிசலை தடுக்கும் வகை யில் யுடேர்ன் போன்ற திட்டங்கள் மாவட்டத்தில் மட்டுமல்ல தமிழகம் முழுவதும் செயல்படுத்தும் வகையில் முன்மாதிரியான திட்டங்களாக திகழ்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் மாநகர் காவல் ஆணையருக்கு பொதுமக் கள் மத்தியில் பாராட்டுக் கள் குவிகின்றன. இந்நிகழ்ச்சியில் துணை ஆணையாளர் சரவண குமார், உதவி ஆணையாளர் நந்தினி, காவல்நிலைய ஆய் வாளர் காசி பாண்டியன், ராஜஸ்தானி சங்க நிர்வாகி கள் மற்றும் திட்டக்குழு உறுப்பினர் கார்த்திக் செல்வராஜ், காந்தி பார்க் பாலதண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் அறங்காவலர் குழு தலைவர் து.பரமசிவன் மற்றும் காவலநிலைய உதவி ஆய்வாளர்கள், காவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கும் விழா



**தேனி, நவ. 16–**

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி தொகுதிக் குட்பட்ட மயிலாடும்பாறை கிராமத்தில் சமூகநல மற்றும் மகளிர் உரிமைத் துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட பணிகள் சார்பில் ஊட்டச் சத்தை உறுதி செய்யும் திட்டத்தின் கீழ் ஊட்டச் சத்து குறைபாடு உள்ள குழந்தைகளின் தாய்மார் களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கும் விழா நடைபெற்றது. இந்த விழாவில் தேனி மாவட்ட ஆட்சியர் ஷஜீவனா தலைமை உரை ஆற்றி தமிழக அரசின் பல்வேறு திட்டங்கள் பற்றியும் குழந்தைகளின் வளர்ச்சிகள் பற்றியும் ஊட்டச்சத்துக்கள் பற்றியும் பேசினார். இதில் சிறப்பு அழைப்பாளராக ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் மயிலாடும்பாறை ஒன்றிய குழு தலைவர் சித்ரா சுரேஷ், மயிலாடும்பாறை குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் சித்ரா, திமுக வடக்கு ஒன்றிய செயலாளர் தங்கப்பாண்டி, முன்னாள் ஒன்றிய கவுன் சிலர் எம்எஸ் மாடசாமி, ஒன்றிய கவுன் சிலர்கள் மச்சக்காளை, பிரபாகரன், கருப்பையா, சிலம்பரசன் உள்ளிட்ட பல்வேறு துறை அதி காரிகள் கலந்து கொண்டனர்.

# வாக்காளர் பட்டியல் திருத்த சிறப்பு முகாம்



சேலம் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சுருக்க முறை திருத்த சிறப்பு முகாம் நடைபெற்று வரும் வாக்குச்சாவடிகளில் ஒன்றான சேலம், அரியாகவுண்டம்பட்டி மாநகராட்சி துவக்கப்பள்ளியில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி, ஆய்வு மேற்கொண்டார்கள்.

# காரைக்கால் அண்ணாமலை ஈஸ்வரர் கோவில் சார்பில் கடைமுக தீர்த்த மகோத்சவம்



**காரைக்கால், நவ. 16–**

காரைக்கால் ஸ்ரீகயிலாச நாதர்,ஸ்ரீநித்தியக்கல்யாணப் பெருமாள் வகையறா தேவஸ்தானத்தைச் சேர்ந்த ஸ்ரீ அண்ணாமலை ஈஸ்வரர் கோவில் சார்பில், ஐப்பசி கடைசி நாளை முன்னிட்டு கடைமுக தீர்த்த மஹோத்ஸவம் நேற்று சிறப்பாக நடைபெற்றது.

காரைக்கால் ஸ்ரீ கயிலாசநாதர், ஸ்ரீ நித்தியக் கல்யாணப்பெருமாள் வகையறா தேவஸ்தானத் தைச் சேர்ந்த ஸ்ரீ அண்ணா மலை ஈஸ்வரர் கோவில் சார்பில், கடைமுக தீர்த்த மஹோத்ஸவம் நேற்று காலை சிறப்பாக நடை பெற்றது. இந்நிகச்சியை முன்னிட்டு, காலை 6 மணிக்கு, தீபாராதணையும், 6.30 மணிக்கு சுவாமி வீதியுலா நிகழ்ச்சியும், காலை 8 மணிக்கு, காரைக் கால் விழிதியூர் சாலை அரசலாற்று நடைபாதை முடிவில், கடைமுக தீர்த்த மஹோத்ஸவம்(துலா ஸ்நானம் – சுவாமி நீராடுதல்) நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. அதுசமயம் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு புனித நீராடி சாமி தரிசனம் செய்தனர். நிகழ்ச்சி ஏற்பாட்டை, கோவில் நிர்வாக அதிகாரி காளிதாசன் மற்றும் பலர் சிறப்பாக செய்திருந்தனர். நிகழ்ச்சியில் கந்தாஸ் சிவலிங்க ராஜா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# கலைஞர் நூலகம் அமைக்கும் பணி



**சங்கரன்கோவில், நவ. 16–**

திமுக தலைவர் தமிழக முதல்வர் முக ஸ்டாலின் உத்தரவின்படி, தமிழ்நாடு துணை முதலமைச்சர் திமுக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆலோசனையின்படி சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு நூலகம் இளைஞரணி சார்பில் அமைக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் தென்காசி வடக்கு மாவட்ட திமுக இளைஞரணி துணை அமைப்பாளர் சரவணன் ஏற்பாட்டில் சங்கரன்கோவில் புளியங்குடி சாலை சந்திப்பில் கலைஞர் நூலகம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில் இந்த பணிகளை தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ நேரில் சென்று ஆய்வு செய்து ஆலோசனைகளை வழங்கினார். இந்த நூலகமானது சுமார் 2000 புத்தகங்களுக்கு மேல் வைக்கப்பட்டு போட்டி தேர்வு எழுதும் மாணவ, மாணவிகளின் வசதிக்காக ஏற்படுத்தப்படுகிறது. மேலும் இந்த நூலகத்தில் மாணவ, மாணவிகள் அமைதியான சூழ்நிலையில் அமர்ந்து படிக்கும் ஏற்பாடுகளும், குளிர்சாதன வசதியும் செய்யப்பட்டுள்ளது நூலக பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு இந்த நூலகம் பயன்பாட்டிற்கு வர உள்ளது. நூலகம் ஆய்வின்போது சங்கரன்கோவில் நகராட்சி சேர்மன் உமா மகேஸ்வரி சரவணன், தென்காசி வடக்கு மாவட்ட திமுக இளைஞரணி அமைப்பாளர் முகேஷ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சரவணன், வார்டு செயலாளர் கள் தங்கவேல், காளிச்சாமி பாண்டியன், உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# ஊட்டச்சத்து நலப்பெட்டகம் வழங்கல்



கடலூர், நவ. 16-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அரியலூர் மாவட்டத்தில் "ஊட்டச்சத்தை உறுதி செய்" திட்டத்தின் இரண்டாம் தொகுப்பை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து நலப்பெட்டகத்தை வழங்கினார். இதில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் ஐயப்பன், மாநகராட்சி மேயர் சுந்தரிராஜா, மாநகராட்சி துணை மேயர் தாமரைச்செல்வன், மாநகராட்சி ஆணையார் அனு ஆகியோர் கலந்துகொண்டனர்.

# அமைச்சர் தலைமையில் ஆலோசனை கூட்டம்



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் சாமிநாதன் தலைமையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் திருப்பூர் மாவட்டத்தில் நிலத்தடி நீர் மேம்படுத்தும் பொருட்டு மழை நீரை குளம், குட்டைகள், பொதுக்கிணறுகள் மற்றும் ஆழ்குழாய் கிணறுகளில் நீர் செறிவூட்டும் திட்ட குழு ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜ்.

# தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கிய அமைச்சர்



வேலூர், நவ. 16-

தமிழ்நாடு முதலமைச்சர் "ஊட்டச்சத்தை உறுதி செய்" திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை அரியலூர் மாவட்டம், வாரணவாசி குழந்தைகள் மையத்தில் தொடங்கி வைத்ததை தொடர்ந்து வேலூர் மாவட்டத்தில் காட்பாடி வட்டம், செம்பராயநல்லூர் ஊராட்சியில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் "ஊட்டச்சத்தை உறுதி செய்" திட்டத்தை தொடங்கி வைத்து தாய்மார்களுக்கு ஊட்டச் சத்து பெட்டகங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி, காட்பாடி ஒன்றியக்குழுத்தலைவர் வேல்முருகன், துணைத்தலைவர் சரவணன், மாநகராட்சி துணை மேயர் சுனில்குமார், 1 வது மண்டலக்குழுத்தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் சுலோக்சனா கிருபாகரன், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் சாந்தி பிரியதர்ஷினி, வேலூர் வருவாய் கோட்டாட்சியர் பாலசுப்பிரமணியன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# நலத்திட்ட உதவிகள் வழங்கல்



தென்காசி, நவ 16-

தென்காசி மாவட்டம் இலஞ்சியில் 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவினை முன்னிட்டு நடைபெற்ற மாவட்ட அளவிலான கூட்டுறவு வார விழாவில், மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் ராணிஸ்ரீகுமார், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ். பழனிநாடார், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ராஜா ஆகியோர் முன்னிலையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

# இந்திய பங்கு சந்தையில் நுழைந்தது ஸ்விக்கி சந்தை மதிப்பு ரூ.1 லட்சம் கோடியை கடந்து சாதனை




கோவை, நவ. 16-

இந்தியாவில் மளிகை பொருட்கள் உள்ளிட்ட உணவு டெலிவரி செய்யும் நிறுவனங்களில் முன்னணி நிறுவனமாக திகழும் ஸ்விக்கி நிறுவனம் இந்திய பங்கு சந்தையில் கடந்த சில தினங்களுக்கு முன் நுழைந்துள்ளது. இந்த நிலையில் இதன் சந்தை மதிப்பு ரூ.1 லட்சம் கோடியை கடந்து சாதனை படைத்துள்ளது. பிஎஸ்இ லிமிடெட்டில் இதன் பங்குகள் 412 ரூபாய்க்கு பட்டியலிடப்பட்ட உடனேயே 5.64 உயர்ந்தது. இன்று இதன் பங்குகள் 19.30 சதவீதம் அதிகரித்து ரூ.465.30ஆக உள்ளது. நிறுவனத்தின் பங்குகள் 16.91 சதவீதம் உயர்ந்து ரூ.455.95ல் முடிந்தது.பங்குச் சந்தையில் பங்குகள் பட்டியலிடப்பட்ட நாளில் இந்நிறுவனத்தின் சந்தை மதிப்பு 1 லட்சம் கோடி ரூபாயைத் தாண்டியது. இதன் பங்குகள் வெளியிடப்பட்ட உடனேயே முதலீட்டாளர்களிடம் மிகுந்த வரவேற்பை பெற்றதோடு, உள்நாடு மற்றும் சர்வதேச அளவிலான முதலீட்டாளர்கள் இதன் பங்குகளில் முதலீடு செய்யத் துவங்கியதை அடுத்த இதன் பங்குகள் கிடுகிடுவென அதிகரிக்கத் துவங்கியது. கடந்த அக்டோபர் மாதம் வெளிநாட்டு போர்ட்போலியோ முதலீடுகள் 11.2 பில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு மேல் வெளியேறிய நிலையில், ஸ்விக்கி பங்குகள் மட்டும் 1.335 பில்லியன் அமெரிக்க டாலர்கள் வெளிநாட்டு முதலீட்டு ஏலங்களை ஈர்த்துள்ளது. இந்த நிலையில் ஸ்விக்கி நிறுவனம் முதலீட்டாளர்கள் கூட்டத்தை கோவையில் நடத்தியது. இதில் ஸ்விக்கி நிறுவனத்தின் தலைமை மனித வள அதிகாரி கிரீஷ் மேனன், நிதி ஆலோசனைப் பிரிவு இயக்குனர் கிருத்திகா சாஹா மற்றும் அவெண்டஸ் கேபிடல் நிறுவனத்தைச் சேர்ந்த கௌரவ் சர்மா ஆகியோர் பேசினார்கள்.

# சட்டம் ஒழுங்கு பிரச்சினை குறித்து உள்துறை அமைச்சருடன் டி.ஜி.பி., ஐ.ஜி ஆலோசனை



புதுச்சேரி, நவ. 16-

சட்டம் ஒழுங்கு மற்றும் போலீசார் இடமாற்றல் தொடர்பாக உள்துறை அமைச்சர் நமச்சிவாயத்துடன், டி.ஜி.பி., ஆலோசனை நடத்தினார்.

புதுச்சேரி உள்துறை அமைச்சர் நமச்சிவாயத்தை போலீஸ் டி.ஜி.பி., ஷாலினி சிங், ஐ.ஜி., அஜித் குமார் சிங்லா, செயலர் கேசவன், சீனியர் எஸ்.பி., அனிதா ராய் சட்டசபையில் சந்தித்து பேசினர். அப்போது, புதுச்சேரியின் சட்டம் ஒழுங்கு பிரச்சனை, எஸ்.பி., இன்ஸ்பெக்டர்கள் இடமாற்றம், போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்துவது, புத்தாண்டு பாதுகாப்பு ஏற்பாடுகள், போக்குவரத்து மாற்றங்கள், சுற்றுலா பயணிகளுக்கும், பொதுமக்களுக்கும் பாதுகாப்பு பலப்படுத்துவது குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து, ஒரிரு நாட்களில் போலீஸ் அதிகாரிகள் இடமாற்றல் உத்தரவு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், உள்துறை அமைச்சரை சந்திப்பதற்காக அவர் அலுவலகத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டர்கள், சப் இன்ஸ்பெக்டர்கள் ஏராளமானோர் சந்திக்க காத்திருந்தனர்.

# விழிப்புணர்வு பேரணி




கடலூர், நவ. 16-

கடலூர் டவுன்ஹால் அருகே, தேசிய குழந்தைகள் தினத்தை முன்னிட்டு குழந்தைகளின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பை வலியுறுத்தும் வகையில் குழந்தைகளுக்கான நடைபயணம் மற்றும் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில் குமார், கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் ஐயப்பன் அவர்கள், மாநக ராட்சி மேயர் சுந்தரிராஜா, மாநகராட்சி துணைமேயர் தாமரைச்செல்வன், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் சுந்தர், குழந்தைகள் நலக்குழு தலைவர் லட்சுமி வீரராகவலு உட்பட பலர் உள்ளனர்.

# மது குடிப்பதை நிறுத்தாத கணவருக்கு பயம் காட்ட 50 பிபி மாத்திரை சாப்பிட்ட செவிலியர் பலி

காரைக்கால், நவ. 16-

மது குடிப்பதை நிறுத்தாத கணவருக்கு பயம் காட்ட , தாயின் 50 பிபி மாத்திரை சாப்பிட்டு கிராமப்புற செவிலியர் சிகிச்சை பலனின்றி பலியானார்.

காரைக்காலை அடுத்த திரு பட்டினம் வடகட்டளை கிராமத்தை சேர்ந்தவர் அருண்குமார். இவரை திரு.பட்டினம் கீழையூரை சேர்ந்த சிவரங்கனி (32) கடந்த 2011 ஆம் ஆண்டு காதலித்து திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். சிவரங்கனி நாகை மாவட்டத்தை சேர்ந்த திருக்கடையூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கிராமப்புற செவிலியராக பணிபுரிந்து வந்தார். இவரது கணவர் அருண் குமார் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பு சாலை விபத்துக்குள்ளாகி சிறுநீர் பையில் பாதிப்பு ஏற்பட்டு, புதுச்சேரி ஜிப்மர் அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்தார். மேலும் கணவரை சிவரங்கனி தனியார் ஆஸ்பத்திரியில் சேர்த்து சிகிச்சை செய்து வந்தார். சிகிச்சை முடிந்து வீடு திரும்பிய அருண்குமார், மது பழக்கத்துக்கு ஆளாகியதாக கூறப்படுகிறது. இது குறித்து சிவரங்கனி உடல்நிலை சரியில்லாத நேரத்தில் ஏன் மது அருந்துகிறீர்கள் என கேட்டு கண்டித்துள்ளார். தொடர்ந்து அருண்குமார் வேலைக்கு செல்லாமல் மது அருந்தி வந்ததாக கூறப்படுகிறது. இது குறித்து சிவரங்கனி மீண்டும் கண்டித்துள்ளார். இந்நிலையில் தொடர்ந்து அருண்குமார் மது அருந்தி வந்ததால் கடந்த 13 ஆம் தேதி கணவரை கண்டித்து விட்டு தூங்க சென்றவர், திடீரென நள்ளிரவு வாந்தி எடுத்ததாக கூறப்படுகிறது. கணவர் மற்றும் உறவினர்கள் விசாரித்த பொழுது, கணவர் தொடர்ந்து மதுவுக்கு அடிமையாகி வருவதால் வேறு வழி இல்லாமல் தாயின் பிபி மாத்திரை 50 யை சாப்பிட்டு விட்டதாக கூறியுள்ளார். உடனடியாக அவரை காரைக்கால் அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக் காக சேர்த்துள்ளனர். சிகிச்சையில் இருந்த சிவரங்கனி நேற்று முன்தினம் மாலை சிகிச்சை பலனின்றி இறந்துபோனார். இதுகுறித்து சிவரங்கனியின் சகோதரர் மணிகண்டன் திரு.பட்டினம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

நேற்று முன்தினம் மாலை சிவரங்கனி சிகிச்சையில் இருந்த பொழுது, அபாய கட்டத்திற்கு சென்றதால், மேல் சிகிச்சைக்காக புதுச்சேரி கொண்டு செல்லுமாறு டாக்டர்கள் சிபாரிசு செய்துள்ளனர். அதன்பேரில் புதுச்சேரி செல்ல ஆம்புலன்ஸ் கேட்ட பொழுது, சுமார் 2 மணி நேரம் ஆகியும் ஆம்புலன்ஸ் ஏற்பாடு செய்யப்படவில்லை என கூறப்படுகிறது. இந்நிலையில் சிவரங்கனி சிகிச்சை பலனின்றி புதுச்சேரி கொண்டு செல்லா மலேயே இறந்து போனார். ஆம்புலன்ஸ் தர தாமதப்படுத்திய ஆஸ்பத்திரி நிர்வாகத்தை கண்டித்து, சிவரங்கனியின் உறவினர்கள் ஆஸ்பத்திரி வாயிலில் நேற்று பகல் சாலை மறியலில் ஈடுபட்டனர். அப்போது அங்கு வந்த நகர போலீசார் அவர்களை சமாதானப்படுத்தி கலெக்டர் இடம் மனு அளிக்குமாறு அறிவுறுத்தி உள்ளனர். அதன்பேரில் அவர்கள் கலெக்டரிடம் மனு வழங்கி கலைந்து சென்றனர். இதனால் அங்கு மருத்துவமனை வாயிலில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

E-mail:maalaiexpresspdy@gmail.com
• சனி • நவம்பர் 16, 2024
மாலை எக்ஸ்பிரஸ்

# ஆர்.பி.உதயகுமாரிடம் வாழ்த்து



தென்காசி தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட குத்தால பெருமாள், கடையநல்லூர் எம்எல்ஏவும் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளருமான கிருஷ்ணமுரளி என்ற குட்டியப்பா தலைமையில் சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத்தலைவர் ஆர் பி உதயகுமாரை சந்தித்து வாழ்த்து பெற்றார். அருகில் முன்னாள் அமைச்சர் ராஜலட்சுமி.

# விழிப்புணர்வு பேரணியை துவக்கி வைத்த ஆட்சியர்




கடலூர், நவ. 16–

கடலூர் டவுன்ஹால் அருகே 71 வது அனைத்திந்திய கூட்டுறவு வாரவிழாவை முன்னிட்டு கூட்டுறவுத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கூட்டுறவு கொள்கைகள் மற்றும் கூட்டுறவு இயக்கத்தின் செயல்பாடுகள் மக்களை சென்றடையும் வகையில் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் ஐயப்பன், மாநகராட்சி துணை மேயர் தாமரைச்செல்வன், இணைப்பதிவாளர், மேலாண்மை இயக்குநர், கடலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கோமதி, கடலூர் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் ரவிச்சந்திரன் உட்பட பலர் உள்ளனர்.

# தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கல்





நெல்லை, நவ. 16–

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அரியலூர் மாவட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டம் சார்பில் ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டம் 2ஆம் தொகுப்பு தொடக்க விழாவினை தொடங்கி வைத்து குழந்தைகளின் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை ஆயுதப் படை குடியிருப்பு அருகில் உள்ள குழந்தைகள் மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் குழந்தைகளின் ஊட்டச்சத்தை மேம்படுத்த குழந்தைகளின் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் கார்த்திகேயன் வழங்கினார்கள்.

உடன், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அப்துல் வஹாப், மாநகராட்சி துணை மேயர் ராஜூ, கிறித்தவ தேவாலயங்களில் பணியாற்றும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியத் தலைவர் விஜிலா சத்தியானந்த் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# ஆரோக்கியமான வாழ்விற்கு அக்குபஞ்சர் முழுமையான தீர்வாகிறது அக்குபஞ்சர் ஹீலர்கள் கூட்டமைப்பு அக்குஹீலர் கி ரம்யா தகவல்

புதுச்சேரி, நவ. 16–

புதுச்சேரி மண்டல செயற்குழு உறுப்பினர், அக்குபஞ்சர் ஹீலர்கள் கூட்டமைப்பு (இந்தியா) கட்டுரையாளர் அக்குஹீலர் கி ரம்யா வெளியிட்டுள்ள தகவல்:

உலகெங்கும் நோயுற்ற மனிதர்களுக்கு உதவும் விதமாக தனித்தனியான மனிதர்களின் தேடல்களின் அடிப்படையில் வெவ்வேறு விதமான மருத்துவங்கள் தோன்றின. அந்தந்த நாடுகளின் சூழல், பழக்கவழக்கங்கள், தன்மைகளுக்கேற்ப புதிது புதிதான மருத்துவ முறைகள் தோன்றின. தமிழகத்தில் சித்த மருத்துவம், வட இந்தியா மற்றும் கேரளத்தில் ஆயுர்வேதம், பாரசீகத்தில் யுனானி, சீனத்தில் அக்குபங்சர், பரவலாக இயற்கை மருத்துவம் என்று முழுமையான வாழ்க்கை முறையை அடிப்படையாகக் கொண்ட மருத்துவங்கள் ஆரம்ப காலத்தில் வெளிப்பட்டன.

இயற்கையை உணர்ந்த சான்றோர்களின் கண்டுபிடிப்புகள் நவீன காலம் வரை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. பதினெட்டாம் நூற்றாண்டில் ஹோமியோபதி ஜெர்மனியிலும், காந்த சிகிச்சை ரஷ்யாவிலும் கண்டுபிடிக்கப்பட்டன. இதற்கு பின்பும் பயோ கெமிக் மருத்துவம், மலர் மருத்துவம், எலக்ட்ரோ ஹோமியோபதி போன்ற பல மருத்துவ முறைகள் இயற்கையோடு இயந்தவைகளாக



தோன்றின. அக்குபஞ்சர் மருத்துவ முறையின் தோற்றுவாய் சீனா தான் என்பதை சீன இலக்கியங்களும், மக்களின் வாழ்க்கை நடைமுறைகளும் நிரூபிக்கின்றன.

சீன சோசியலிச அரசு அக்குபஞ்சர் முறையை அரசு மருத்துவமாக அறிவித்த பிறகு உலகம் முழுவதும் அக்குபஞ்சர் வரவேற்பை பெற்றது.

மூலிகை மருத்துவத்தோடும், ஆங்கில மருத்துவத்தோடும் இரண்டறக் கலந்து இருந்த சீனா அக்குபஞ்சர் ஒவ்வொரு நாட்டிற்கு பரவும் போதும் புதிய சிகிச்சை முறைகளோடு இணைத்துச் செய்யப்பட்டது.

இந்நிலையில்தான் டாக்டர் சகோதரர்கள் என்று அழைக்கப்படும் டாக்டர் பஸ்லூர் ரஹ்மான், டாக்டர். சித்திக் ஜமால் ஆகியோரின் வருகை நிகழ்ந்தது இந்திய அக்குபஞ்சர் என்று கூறப்படும் மரபுவழி அக்குபஞ்சர் மலர்ந்தது.

ஏற்கனவே வழக்கத்தில் இருந்த சீன அக்குபஞ்சர் முறைக்கும், டாக்டர் பஸ்லூர் ரஹ்மான் அறிமுகம் செய்த புதிய (இந்தியா) அக்குபஞ்சர் முறைக்கும் ஏராளமான வேறுபாடுகள் தத்துவ ரீதியிலும், வெளிப்படையாகவும் காணப்பட்டன. இந்திய அக்குபஞ்சர் முறையில் தத்துவ அடிப்படையிலான நாடிப் பரிசோதனையும், ஒரே ஒரு புள்ளியில் சிக்கிச்சை அளிக்கத்தக்க புள்ளி தேர்வு முறையும், எந்தவிதமான மருந்துகளை பரிந்துரைக்காத தன்மையும், இந்திய தத்துவ மரபு அடிப்படையிலான கழிவு நீக்க தத்துவமும் புதிய அக்குபஞ்சரின் தனிச் சிறப்புகள் ஆகும்.

இந்திய அக்குபஞ்சரின் ஒற்றைப் புள்ளி சிகிச்சை முறையே உலகில் உள்ள எல்லா விதமான நோய்களுக்கும் போதுமானது என்பதை டாக்டர். பஸ்லூர் ரஹ்மான் தன்னுடைய 1.50 லட்சத்திற்கும் அதிகமான நோயாளிகளைக் கொண்டு நிரூபித்தார்.

சீனாவில் தோன்றி, சீனாவிலேயே அழிந்துபோன அக்குபஙசரின் தனித்தன்மையை, இந்தியாவில் டாக்டர் சகோதரர்கள் மீட்டெடுத்தனர். அவர்களிடம் மருத்துவம் பயின்ற பல மருத்துவர்கள் தமிழகம் முழுவதும் இந்திய அக்குபஞ்சர் முறையைப் பின்பற்றி வருகின்றனர்.

பிறந்த குழந்தைகள் முதல் வயதானவர்கள் வரை அக்குபஞ்சர் மருத்துவத்தில் சிகிச்சை பெற்றுப் பயனடைந்தோர் எண்ணற்றோர்.

நாள்பட்ட நோய், பரம்பரை நோய் என்று சொல்லக்கூடிய நோய்கள் உட்பட அனைத்து நோய்களுக்கும் அக்குபஞ்சர் மருத்துவத்தில் தீர்வு உண்டு. தற்காலத்தில் தென்னிந்தியாவில் தமிழ்நாடு, கேரளா, கர்நாடக, ஆந்திரப் பிரதேசம், புதுவை போன்ற மாநிலங்களில் இந்திய அக்குபங்சர் சிகிச்சையாளர்கள் பலர் உள்ளனர். மேலும் 178க்கும் மேற்பட்ட நாடுகளில் அக்குபஞ்சர் முக்கியத்துவம் வாய்ந்த மருத்துவமாக திகழ்கிறது.

மருந்தில்லா மருத்துவமான அக்குபஞ்சர் மருத்துவ முறையில் நோயின் மூல காரணங்களை நாடிப் பரிசோதனை மூலமாக அறிந்து சரியான சிகிச்சை அளிப்பதால் நோய்களிலிருந்து முழுமையாக குணமடைய இயலும். மேலும் உடல் உபாதைகள் ஏற்படாதிருக்க அக்குஹீலர்கள் ஆலோசனை வழங்குவதால் ஆரோக்கியமான வாழ்விற்கு அக்குபஞ்சர் முழுமையான தீர்வாகிறது.

# அ.தி.மு.க செயல்வீரர்கள் கூட்டம்





புதுக்கேட்டை, நவ. 16–

புரட்சித்தலைவர் எம்ஜிஆர், புரட்சித்தலைவி அம்மா ஆகியோரின் தெய்வீக நல்லாசியோடு கழக பொதுச்செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர், முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி ஆணைக்கிணங்க புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி, புதுக்கோட்டை வடக்கு நகர கழகம் சார்பில் செயல் வீரர்கள், வீராங்கனைகள் ஆலோசனை கூட்டம் நடந்தது. முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர், கழக அமைப்பு செயலாளர், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் ஏற்பாட்டில் கழக அமைப்பு செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சி பொருளாளர், தூத்துக்குடி வடக்கு மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர், மாண்புமிகு. கடம்பூர்.செ.ராஜு தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் நகரச் செயலாளர்கள் பாஸ்கர் மற்றும் கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# புதுச்சேரியில் பழங்குடியினர் தின விழா காணொலியில் பிரதமர் மோடி பங்கேற்பு

புதுச்சேரி, நவ. 16–

புதுச்சேரியில் நடந்த பழங்குடியினர் கௌரவ தின விழாவில், பிரதமர் மோடி காணொலி வாயிலாக கலந்துகொண்டார்.

பகவான் பிர்சா முண்டா கடந்த, 1875ம் ஆண்டு நவ. 15ம் தேதி ராஞ்சி மாவட்டத்தில், உலிகாட் என்ற இடத்தில் பிறந்தார். தனது 19, வயதிலேயே அதிதீவிர சுதந்திரப் போராட்ட வீரர் ஆனார். அவரை தார்தி அபா என்று மக்கள் அன்போடு அழைத்தனர்.

தார்தி அபா என்றால், மண்ணின் தந்தை என்று பொருள், கடந்த 1899ம் ஆண்டு பிரிட்டிஷ் படையை எதிர்த்து போராடிய குற்றத்திற்காக கைது செய்யப்பட்டார். 1900 ஜூன், 9ம் தேதி அவர் காலரா நோயால் இறந்ததாக பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவித்தது. அவரை இன்று வரை பழங்குடியின



மக்கள் கடவுளாக வழிபடுகின்றனர். அவர் பிறந்த தினம், பழங்குடியினர் கௌரவ தின விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன், பழங்குடியினர் கௌரவ தின விழாவை ஒவ்வொரு ஆண்டும் நவ. 15ம் தேதி முதல் 26ம் தேதி வரை கொண்டாட வேண்டும் என, மத்திய அரசு ஆணை பிறப்பித்தது.

இந்நிலையில் பகவான் பிர்சா முண்டாவின், 150வது பிறந்த நாளை யொட்டி, புதுச்சேரி அரசு ஆதிதிராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் நேற்று தர்மபுரி ஸ்ரீராம் திருமண நிலையத்தில் விழா கொண்டாடப் பட்டது. விழாவில் பிரதமர் மோடி, காணொலி வாயிலாக பங்கேற்றார். விழாவில் கவர்னர் கைலாஷ்நாதன், முதலமைச்சர் ரங்கசாமி, சபாநாயகர் செல்வம், அமைச்சர் சாய் ஜெ. சரவணன் குமார், அரசு கொறடா ஏ.கே.டி. ஆறுமுகம், கே.எஸ்.பி.ரமேஷ் எம்.எல்.ஏ., ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டம்






தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அரியலூர் மாவட்டத்தில் ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை தொடங்கி வைத்த நிகழ்ச்சியை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் திருப்பூர் மாவட்டம், தாராபுரம் சித்ராவுத்தன்பாளையம் நகராட்சி நடுநிலைப்பள்ளி அங்கன்வாடி மையத்தில் பார்வையிட்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜ்.

# எல்.பி.ஜி பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி




**புதுச்சேரி, நவ. 16–**

இந்திரா இண்டன் சர்வீஸ் மற்றும் புதுவை பாரதிதாசன் மகளிர் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் எல்.பி.ஜி பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது.

இந்திரா இண்டன் சர்வீஸ் மற்றும் புதுவை பாரதிதாசன் மகளிர் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் சமையல் எரிவாயு சிலிண்டர் கையாள்வது மற்றும் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கல்லூயி முதல்வர் முனைவர் ராஜிசுகுமார் தலைமை தாங்கினார் . திருச்சி மண்டல LPS Sale Head ஜெயபிரகாஷ், காவல் கண்காணிப்பாளர் மாறன், புதுச்சேரி இந்தியன் ஆயில் LPG உதவி மேலாளர் சம்பத்குமார் ஆகியோர் மாணவிகளுக்கு lpg பாதுகாப்பு பற்றி விளக்கினர். இவ்விழாவில் இந்திரா இண்டன் சர்வீஸ் பரசுராமன், மாநில NSS அதிகாரி சதிஷ்குமார் மற்றும் முன்னாள் ஆசிரியர் தேசிய விருதாளர் ஆசிரியர் திலகவதி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இவ்விழாவின் ஏற்பாடுகள் கல்லூரியின் NSS அதிகாரிகள் ஆரோக்கிய மேரி மற்றும் ராஜலட்சுமி செய்திருந்தனர். இதில் 200 மாணவிகள் பங்கு பெற்று பயனடைந்தனர்.

# மாவட்ட அளவிலான கலைத்திருவிழா போட்டி





**மதுரை, நவ. 16–**

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கலைத்திறன்களை வெளிக்கொணரும் விதமாக கலைத்திருவிழா நடத்தப்பட்டு வருகிறது. 2024– 2025 ஆம் கல்வியாண்டில் மதுரை மாவட்டத்தில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு (12), (35), (68), (910) மற்றும் (1112) என 5 பிரிவுகளில் 7 வகையான கலை இனங்களில் (கவின்கலை, இசை, கருவியிசை (துளை காற்றுக்கருவி, தந்திக்கருவி. தோற்கருவி) நடனம், நாடகம்) 30 வகையான போட்டிகள் பள்ளி, குறு வளமைய மற்றும் வட்டார அளவில் நடைபெற்றது.

அந்த வகையில் மதுரை நரிமேடு பகுதியில் உள்ள ஓசிபிஎம் மேல்நிலைபள்ளியில் மாவட்ட அளவிலான கலைத் திருவிழா நடைபெற்றது. இந்நிகழ்வில் வணிகவரித் துறை அமைச்சர் மூர்த்தி, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா கலந் கொண்டு கண்டுகளித்தனர். இதில் மதுரை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ரேணுகா, சோழவந்தான் எம்எல்ஏ வெங்கடேசன், பள்ளி தலைமையாசிரியர் மேரி மற்றும் பள்ளி கல்வித்துறை அதிகாரிகள் மாணவ மாணவிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

பள்ளி அளவில் வெற்றிபெற்ற மாணவர்கள் குறு வளமைய மற்றும் வட்டார அளவிலான போட்டிகளில் கலந்துகொண்டனர். வட்டார அளவில் வெற்றிபெற்ற 3790 மாணவர்கள், மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொள்கின்றனர். மாவட்ட அளவிலான போட்டிகள் 15.11.2024 மற்றும் 16.11.2024 ஆகிய நாட்களில் புனித பிரிட்டோ மேல்நிலைப்பள்ளி (1112) ஓ.சி.பி.எம். பெண்கள் மேல்நிலைப்பள்ளி (910), லிறிழி பெண்கள் மேல்நிலைப்பள்ளி (6.8) மற்றும் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஒத்தக்கடையில் (1235) நடைபெறுகிறது. மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு, மாநில அளவில் போட்டிகள் நடத்தப்படும். மாநில அளவில் அதிக போட்டிகளில் வெற்றி பெறும் மாணவருக்கு தமிழக அரசின் சார்பில் கலையரசன் விருதும், மாணவிக்கு கலையரசி விருதும் வழங்கி சிறப்பிக்கப்படுகிறது.

# உரிமம் இன்றி வணிகம் புரிந்தால் நடவடிக்கை நியமன அலுவலர் எச்சரிக்கை




**தருமபுரி, நவ. 16**

தர்மபுரி மாவட்டம், கம்பைநல்லூரில் உணவு பாதுகாப்புத்துறை சார்பாக கடை வீதி வாசவிமகால் வளாகத்தில் உணவு பாதுகாப்பு உரிமம் மற்றும் பதிவு பெற, மற்றும் புதுப்பித்தல் சார்ந்து விண்ணப்பங்கள் பெறும் முகாம் அனைத்து வணிகர் சங்க செயலாளர் லட்சுமி நாராயணன், நிர்வாகிகள் செந்தில், சுந்தர் மற்றும் காரிமங்கலம் மற்றும் பாலக்கோடு ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் நந்தகோபால், மொரப்பூர் ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் திருப்பதி, பாப்பிரெட்டிப்பட்டி உணவு பாதுகாப்பு அலுவலர் அருண் உள்ளிட்டோர் முன்னிலையில் மாவட்ட நியமன அலுவலர் மருத்துவர் ஏ.பானுசுஜாதா தலைமையில் நடைபெற்றது. நியமனஅலுவலர் தன் உரையில், தருமபுரி மாவட்டத்தில் அனைத்து உணவு வணிகர்களும் உரிய உணவு பாதுகாப்பு உரிமம் பெற்று இருத்தல் அவசியம். உணவு பாதுகாப்பு உரிமம் மற்றும் பதிவு இன்றி வணிகம் புரிந்தால் ஆறு மாதம் சிறை தண்டனையும் ஐந்தாயிரம் முதல் ஐந்து லட்சம் வரை அபராதம் விதிக்க உணவு பாதுகாப்பு சட்டம் வகுக்கப்பட்டுள்ளது என எச்சரிக்கை செய்தார்.

மேலும் தாங்கள் விற்பனை செய்யும் உணவுப் பொருட்களை உரிய லேபிள் நடைமுறை பின்பற்றவும் உரிய விவரங்கள் அச்சிடப்பட்டுள்ளதா என கண்காணித்து காலாவதி தேதிக்கு முன்பாக அவற்றை அப்புறப்படுத்துவது அவசியம் என்பதுடன் தன் சுத்தம், சுற்றுப்புற சுகாதாரம் மேம்பட இருத்தல் அவசியம் என தெரிவித்துக் கொண்டார். மேலும் நடமாடும் சாலையோர வணிகர்களுக்கு பதிவு கட்டணம் 5 ஆண்டுகளுக்கு விலக்களிக்கப் படுகிறது. அவர்கள் விண்ணப்ப கட்டணம் மட்டும் செலுத்தி சான்றிதழ் பெற்றுக் கொள்ளலாம். தாங்களாகவே கட்டணம் இன்றி ஐந்தாண்டு புதுப்பித்தும் கொள்ளலாம் என்ற தகவலை தெரிவித்தார்.

காரிமங்கலம் மற்றும் பாலக்கோடு ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் நந்தகோபால் பேசும்போது, உணவு வணிகர்கள் உரிமம் மற்றும் பதிவை உணவு பாதுகாப்பு அலுவலர் வழிகாட்டுதல் மூலமாகவோ அல்லது தாங்களாகவே https:// foscos.fssai.gov.in <http://foscos.fssai.gov.in/> என்ற இணையதள முகவரியில் தாங்களாகவோ உரிய சான்றுகளை பதிவேற்றி உரிய கட்டணத்துடன் விண்ணப்பித்துக் கொள்ளலாம் , தற்போது தட்கல் முறையிலும் உடன் பதிவு மற்றும் உரிமம் சான்றிதழ் பெற்றுக் கொள்ளலாம்.

மாவட்ட நியமன அலுவலர் மற்றும் உணவு பாதுகாப்பு அலுவலர் மூலம் உரிய ஆய்வுக்கு பின், தங்களுக்கு தாங்கள் குறிப்பிட்ட இணையதள முகவரியில் உணவு பாதுகாப்பு உரிம சான்றிதழ்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்பதை எடுத்துரைத்தார். உணவு பாதுகாப்பு அலுவலர் திருப்பதி தாங்கள் பெரும்ட சான்றிதழ்களை கடைகளில் நுகர்வோர் காணும் வகையில் மாட்டி வைக்க வலியுறுத்தினார். இன்றைய முகாமில் கம்பைநல்லூர், இருமத்தூர், திப்பம்பட்டி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து 100க்கும் மேற்பட்ட வணிகர்கள் பங்கேற்று உரிமம் மற்றும் பதிவு சான்றிதழ் பெற புதிய மற்றும் புதுப்பித்தல் விண்ணப்பங்கள் அளித்தனர். இவை உரிய முறையில் பதிவேற்றப்பட்டு, ஆய்வுக்குப் பின் அளிக்கப்படும். இறுதியாக அனைத்து வணிகர் சங்க செயலாளர் லட்சுமிநாராயணன் நன்றி உரையாற்றினார்

# பெட்டிக்கடைகளில் கூல் லிப், புகையிலை விற்பனை செய்ய விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும்

## வியாபாரிகள் சங்க பேரவை தலைவர் கோரிக்கை



**மதுரை, நவ. 16–**

தமிழ்நாடு வியாபாரிகள் சங்கப் பேரவை சார்பில் மதுரை மண்டல பொதுக்கூட்டம் தமிழ்நாடு பழைய இரும்பு மொத்த வியாபாரிகள் சங்கம் இணைப்பு விழா நடைபெற்றது. இந்த விழாவில் மாநிலத் தலைவர் முத்துக்குமார் கலந்துகொண்டு செய்தி யாளர்களிடம் தெரிவிக்கையில், வாடகைக்கு கடை நடத்துபவர்களுக்கு GST வரிவிதிப்பு என்பதை கடுமையாக எதிர்ப்பதாகவும் ஆன்லைன் வர்த்தகம் அந்நிய முதலீடுகளை வளர்ப்பதற்கு அதிகாரிகள் தவறான கொள்கையை அரசாங்கத்திடம் தெரிவித்து வருகின்றனர்.ஜிஎஸ்டி எதிர்த்து உணவுப்பொருள் சர்வீஸ் செய்பவர்களுக்கு ஜிஎஸ்டி தரக்கூடாது என்று கொள்கை இருக்கிறது. டிசம்பர் 9ஆம் தேதி மாநில பொதுக்குழு கூட்டம் கோயமுத்தூரில் நடைபெறுகிறது அதில் மாநிலம் தழுவிய கடையடைப்பு போராட்டம் நடத்துவதற்கு அறிவிப்பு வெளியாகும்.

கழிவு இரும்பு பொருள்களுக்கு 18, 20 சதவீதம் வரி என்பது ஏற்க முடியாத ஒன்று வரி என்பது 2 சதவிதம் தான் இருக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திமுக ஆட்சிக்கு வந்தால் மின்கட்டணத்தை குறைப்போம் மாற்றி கொடுக்க அளவிடுவோம் என்று சொன்னார்கள் அது எதுவும் செய்யாமல் மின்கட்டணத்தை மூன்று தடவை உயர்த்தி உள்ளனர். திருச்சியில் இருந்து கரூருக்கு செல்கின்ற வாகனங்களுக்கு சுங்க சாவடியில் ஒரு அடி பாதையில் கூட வரி வாங்குகிறார்கள். மத்திய அரசு சுயதொழில் செய்பவர்களை கொத்தடிமையாக வைத்து இருக்கிறது. கூலி லிப், புகையிலையை பெட்டி கடையில் விற்பதற்கு சங்கத்தின் சார்பில் விற்க கூடாது என்று அறிவிப்பீர்களா என்ற கேள்விக்கு கஞ்சா மற்றும் போதை பொருட்களை தடை செய்ய வேண்டும், போதை பொருள் கடத்துவர்கள் எல்லாம் தொழில் அதிபர்களாக மாறிவிடுகிறன்றனர். ஒரு சிலர் கடையில் கணேஷ் புகையிலை விற்றால் அதிகாரிகள் கடையை பூட்டி 50 ஆயிரம் அபதாரம் விதிக்கின்றனர்.

புகையிலை எல்லா மாநிலத்திலும் விற்கின்றனர் கோடி கணக்கில் GST செலுத்தி வருகின்றனர். தமிழ்நாட்டில் மட்டும் 5 ரூபாக்கு வாங்கி 50 ரூபாய்க்கு திருட்டு தனமாக விற்பனை செய்கின்றனர்.

புகையிலை தமிழ்நாட்டில் விற்பனை செய்வதற்கு அனுமதிக்க வேண்டும். புகையிலை கூல் லிப் போன்ற பொருளை விற்பனை செய்ய கூடாது என்று செல்வதை தமிழக அரசு கொள்கையை கைவிட வேண்டும்.10 ரூபாக்கு மதுபாட்டில் வாங்கி 150 ரூபாய்க்கு மதுபாட்டிலை அரசாங்கம் விற்பனை செய்கின்றனர். கஞ்சா அபின் போன்ற போதை பொருட்களை அரசு அதிகாரிகள் தடை பண்ண வேண்டும். புகையிலை தடை செய்து எங்களை திருடனாக்க வேண்டாம். கேரளா ஆந்திரா மாநிலத்தில் கூல் லிப் கணேஷ் புகையிலை பாக்கெட் வைப்பதற்கு அங்குள்ள அரசு அனுமதி தந்திருக்கிறது. அதேபோல் தமிழகத்திற்கு கூலிப் கணேஷ் புகையிலை தமிழ்நாட்டில் விற்பனை செய்வதற்கு தமிழக அரசு அனுமதி அளித்து கொள்கையை மாற்ற வேண்டும். கூலிப் கணேஷ் புகையிலை விற்பனை செய்வதற்கு தமிழக அரசு தடை செய்து இருக்கிறது. ஆகையால் நாங்கள் யாரும் பெட்டிக்கடையில் கணேஷ் புகையிலை விற்கவில்லை. மறைத்து வைப்பதால் தான் அதிகமானோர் அதை தேடி செல்கின்றனர். மருத்துவரை கொலை முயற்சி செய்தவரை கண்டித்து தமிழகம் முழுவதும் உள்ள அரசியல் கட்சிகள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். வியாபாரிகளிடம் மாமுல் கேட்டு வெட்ட படுகொலை செய்கின்றன ஆனால் தமிழக அரசு ஒரு அனுதாபம் கூட தெரிவிக்கவில்லை என தெரிவித்தார்.

# இன்ஜினியர்ஸ் காலனி ஸ்ரீஇஷ்ட சித்தி விநாயகர் கோவிலில் அன்னாபிஷேக விழா



**புதுச்சேரி, நவ. 16–**

இன்ஜினியர்ஸ் காலனியில் உள்ள ஸ்ரீ இஷ்ட சித்தி விநாயகர் கோவில் அன்னாபிஷேகம் விழாவில் பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

புதுச்சேரி முதலியார் பேட்டையில் உள்ள இன்ஜினியர் காலனியில் அமைந்துள்ள ஸ்ரீ இஷ்டசித்தி விநாயகர் கோவிலில், நேற்று மாலை அன்னாபிஷேகம் விழா நடந்தது. விழாவை முன்னிட்டு, மூலவர் மற்றும் நந்தியம் பகவானுக்கு, அபிஷேகம் செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து, பல வகையான காய்கறிகள் மற்றும் அன்னம் சாற்றி, அலங்காரம் செய்யப்பட்டது. சிறப்பு பூஜைகள் நடத்தி, மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். அதனை அடுத்து, பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப் பட்டது.விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாகத்தினர் சிறப்பாக செய்திருந்தனர்.

# கிளான்சா, அர்பன் க்ரூசர் டைசர், அர்பன் க்ரூசர் ஹைரைடர் ‘ஸ்பெஷல் லிமிடெட் எடிஷன்’ கார்கள் சிறப்பு சலுகைகளுடன் டொயோட்டா நிறுவனம் அறிமுகம்

**கோவை, நவ. 16–**

டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனம் தனது வாடிக்கையாளர்கள் தீபாவளியை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில் தனது கிளான்சா, அர்பன் க்ரூசர் டைசர், அர்பன் க்ரூசர் ஹைரைடர் மற்றும் ரூமியன் மாடல்களில் ‘லிமிடெட் எடிஷனை’ அறிமுகம் செய்தது. பல்வேறு சிறப்பு வசதிகளுடன் கூடிய கார்களை வாங்க விரும்பும் வாடிக்கையாளர்களின் விருப்பத்தை பூர்த்தி செய்யும் வகையில் இந்த ‘ஸ்பெஷல் லிமிடெட் எடிஷன்’ கார்களில் மேம்படுத்தப்பட்ட




நவீன சிறப்பு அம்சங்கள் உள்ளன. இதேபோல் அர்பன் க்ரூசர் டைசரின் இ, எஸ் மற்றும் எஸ்+ பெட்ரோல் மாடல்களில் 17,931 ரூபாய் மதிப்பில் 9 கூடுதல் அம்சங்களான அனைத்து வானிலைக்கும் ஏற்ற 3D மேட், 3டிபூட்மேட், முன்பு விளக்கு அலங்காரம், அழகுபடுத்தப்பட்ட முன்புற கிரில், கார் கவர், ஒளிரும் கதவுகள், பின்புற பம்பர் கார்னர் அலங்காரம் (கருப்பு மற்றும் சிவப்பு), ரூப் எண்ட் ஸ்பாய்லர் எக்ஸ்டெண்டர் (கருப்பு மற்றும் சிவப்பு). அர்பன் க்ரூசர் ஹைரைடரில் நியோ டிரைவ் எஸ், T &M மற்றும் ஹைப்ரிட் T & M மாடல்களுக்கு ரூ.50,817 மதிப்பிலான 13 தொகுப்புகளை உள்ளடக்கிய , மட்ப்ளாப் , கதவு விசர் பிரீமியம், அனைத்து வானிலைக்குமான 3D, அழகுபடுத்தப்பட்ட முன்புற பம்பர், அழகுபடுத்தப்பட்ட பின்புற பம்பர், தலை விளக்கு அலங்கரிக்கவும், ஹூட் சின்னம், பாடி கிளாடிங், பெண்டர் அழகுபடுத்துதல், கதவுகள் மூடும் பகுதிகளில் கூடுதல் பாதுகாப்பு, கால் வைக்கும் பகுதிகளில் விளக்கு, டிஜிட்டல் வீடியோ ரெக்கார்டர், கதவுகளில் குரோம் கைப்பிடி என பல்வேறு சிறப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது.

இதுகுறித்து கருத்து தெரிவித்த டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனத்தின் விற்பனை மற்றும் சேவை மற்றும் பயன்படுத்தப்பட்ட கார் வர்த்தகப் பிரிவு துணைத் தலைவர் சபரி மனோகர் கூறுகையில், தீபாவளியையொட்டி சமீபத்தில் அறிமுகம் செய்யப்பட்ட எங்களின் கிளான்சா, அர்பன் க்ரூசர் டைசர் மற்றும் அர்பன் க்ரூசர் ஹைரைடர் லிமிடெட் எடிஷன் கார்களில் இருந்து பல்வேறு சிறப்பு அம்சங்கள் மற்றும் அழகான வடிவமைப்புகள் மற்றும் நவீன தொழில்நுட்பங்கள் ஆகியவை வாடிக்கையாளர்கள் இடையே மிகுந்த வரவேற்பை பெற்றிருப்பது குறித்து நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். தற்போது இந்த கார்களுடன் வரும் கூடுதல் தொகுப்புகள் எங்களின் சான்றளிக்கப்பட்ட தொழில்நுட்ப வல்லுனர்களால் பொருத்தப்பட்டு வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

# மகளிர் மாநாடு குறித்து கலெக்டர் தலைமையில் ஆலோசனை கூட்டம்



காரைக்கால், நவ. 16–

முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி பிறந்த நாளையொட்டி, வருகிற 21 ஆம் தேதி காரைக்காலில் நடத்தப்பட உள்ள மகளிர் மாநாடு குறித்து கலெக்டர் மணிகண்டன் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் பிறந்த நாளை முன்னிட்டு, காரைக்கால் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற மகளிர் மாநாடு குறித்த ஆலோசனைக் கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் மணிகண்டன் தலைமை தாங்கினார். கூட்டத்தில், காரைக்கால் மாவட்ட புதிய சீனியர் போலீஸ் சூப்பிரண்டு சௌஜண்யா மற்றும் அனைத்து அரசு துறை பெண் அதிகாரிகள் கலந்துகொண்டனர். ஒவ்வொரு வருடமும் இந்தியா முழுவதும் இந்திரா காந்தி பிறந்த நாள் விழாவை தேசிய ஒருமைப்பாட்டு வார விழாவாக 19.11.2024ஆம் தேதி முதல் 25.11.2024ஆம் தேதி வரையில் கொண்டாடப்படுகிறது. அதனை முன்னிட்டு 21.11.2024 ஆம் தேதி அன்று மகளிர் தினமாக கொண்டாடப்பட உள்ளது. அதனை காரைக்கால் மாவட்டத்தில் மிகச் சிறப்பாக செயல்படுத்தும் விதமாக மகளிர் மாநாடு நடத்துவது தொடர்பாக முதல் கட்ட ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் அனைத்து துறைகளையும் சேர்ந்த பெண் அதிகாரிகள் கலந்துகொண்டார்கள். மேலும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் நேற்று புதியதாக பொறுப்பேற்றுள்ள காரைக்கால் மாவட்ட முதுநிலை காவல் கண்காணிப்பாளர் லஷ்மி சௌஜன்யா கலந்துகொண்டு ஆலோசனை வழங்கினார். மேலும் இந்த ஆலோசனை கூட்டத்தில் இந்த மகளிர் மாநாட்டினை எவ்வாறு பிரமாண்டமாகவும் நடத்துவது தொடர்பாகவும் புதுச்சேரி அரசின் துணைநிலை ஆளுநர் மற்றும் முதலமைச்சர் இந்த மகளிர் மாநாட்டுக்கு சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டு விழாவினை சிறப்பாக நடத்துவது தொடர்பாகவும், இந்த விழாவில் பெண்களுக்கு பல்வேறு சலுகைகள், பயிற்சிகள், பெண்கள் வாழ்வாதாரத்தை உயர்த்துவது தொடர்பாகவும், பெண்கள் கூட்டமைப்பு மற்றும் பெண்கள் கூட்டுறவு சங்கங்கள் உருவாக்குதல் போன்ற பல்வேறு நலத்திட்டங்களை பெண்களுக்கு செயல்படுத்துவது தொடர்பாகவும் மற்றும் பல்வேறு நிகழ்வுகளை சிறப்பாக நடத்துவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது. கூட்டத்தின் முடிவில் கலெக்டர் மணிகண்டன் பேசுகையில், இந்த மகளிர் மாநாடு மிகச் சிறப்பாக நடைபெறுவதற்கு அனைத்து அரசு துறை அதிகாரிகளும் ஒத்துழைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

# அனைத்திந்திய கூட்டுறவு வார விழா




வேலூர், நவ. 16–

வேலூர் மாவட்டத்தில் 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் காட்பாடி ஸ்ரீ ரங்காலயா திருமண மண்டபத்தில் தொடங்கி வைத்து சிறந்த கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் சிறந்த நியாய விலைக்கை விற்பனையாளர், கட்டுநர்களுக்கு கேடயங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி, சட்டமன்ற உறுப்பினர்கள் நந்தகுமார் (அணைக்கட்டு), கார்த்திகேயன் (வேலூர்) அமுலு விஜயன் (குடியாத்தம்), மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் பாபு, மாநகராட்சி துணை மேயர் சுனில்குமார், மண்டலக் குழுத்தலைவர்கள் நரேந்திரன், யூசுப்கான், புஷ்பலதா வன்னியராஜா, கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் திருகுணஐயப்பத்துரை, இணைப் பதிவாளர்கள் ராமதாஸ், சந்தானம், துணை பதிவாளர் வேலூர் சரகம் சுரேஷ்குப்தா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# காரைக்கால் மாதிரி மாஸ்டர் பிளான் 2041 குறித்து விளம்பரம் செய்ய வேண்டும்

## எம்எல்ஏ நாஜிம் தலைமையில் கலெக்டரிடம் கோரிக்கை




காரைக்கால், நவ. 16–

காரைக்கால் மாதிரி மாஸ்டர் பிளான் 2041 குறித்து தினசரி, தொலைக் காட்சிகளில் விளம்பரம் செய்ய வேண்டும். என்று காரைக்கால் நில வணிக உரிமையாளர்கள் நல சங்கம் எம்எல்ஏ நாஜிம் தலைமையில் கலெக்டரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

காரைக்கால் நில வணிக உரிமையாளர்கள் நல சங்கம் தலைவர் ஆனந்தன், துணைத் தலைவர்கள் முகமது ஜாகிர் உசேன், ரமேஷ் செயலாளர் முகமது ரிபாஸ் மற்றும் பலர் காரைக்கால் தெற்கு தொகுதி எம்எல்ஏ நாஜிம் தலைமையில் நேற்று மாவட்ட கலெக்டர் மணிகண்டனை நேரில் சந்தித்து கோரிக்கை மனு ஒன்று வழங்கினார். அந்த மனுவில் அவர்கள் கூறியிருப்பதாவது: கடந்த இரண்டு மாதங்களுக்கு முன், காரைக்கால் மாதிரி மாஸ்டர் பிளான் 2041 வெளியிடப்பட்டது. காரைக்கால் மாதிரி மாஸ்டர் பிளான் 2041ல் ஆலோசனைகள், மாற்றங்கள் தேவைப் பட்டால் 60 தினங்களுக்குள் காரைக்கால் நகர அமைப்பு குழுமத்தில் தெரிவிக்க வேண்டும் என குறிப்பிடப் பட்டிருந்தது. ஆனால் இது பொதுமக்களை அதிக அளவில் சென்றடையவில்லை. சுமார் 100 விண்ணப்பங்கள் மட்டுமே வந்துள்ளது. மேற்கண்ட மாஸ்டர் பிளான் ஒரு ஆலோசனை கூட்டம் கூட, கூட்டப்படாமல் வெளியிடப்பட்டது.

புதுச்சேரி மாஸ்டர் பிளானில் காணாப்படாத வேஸ்ட் லேண்ட், கிரீண் ஏரியா ஸ்க்ராப் லேண்ட், எக்கோ சென்சிடிவ் ஏரியா இதர பகுதிகள் என வகைப்படுத்தப் பட்டுள்ளது.

கருவை முளைத்துள்ள இடங்கள் வகைப்பாடு இல்லாத நிலங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2041 வரை வேறுபயன்பாட்டிற்கு மாற்ற முடியாத வகையில் தற்சமயம் உள்ள நிலையை மாஸ்டர் பிளான் எதிரொலிக்கிறது. தொலைநோக்கு பார்வையில் 2041 க்கு மாஸ்டர் பிளான் அமைக்க வேண்டும். இதுவே வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்த முடியும். தாங்கள் இதனை பரிசீலித்து தங்கள் தலைமையில் காரைக்கால் நகரமைப்பு குழும அலுவலகம், சீனியர் டவுன் பிளானர், காரைக்கால் நிலவணிகர் உரிமையாளர்கள் நலச்சங்கம் ஆகியோர் முன்னிலையில் ஆலோசனைக் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட வேண்டும். மேலும் இது சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள நிலத்தர பயன்பாடு பதிவேட்டில் உள்ள எழுத்துக்கள் கண்ணுக்கு தெரியாத வகையில் மிகவும் சிறியதாக உள்ளது. அதனை கண்ணுக்குத் தெரியும் வகையில் பெரிதாக வெளியிடவும். மேலும் இதற்காக கொடுக்கப்பட்ட காலக்கெடுவினை மேலும் இரண்டு மாதங்களுக்கு நீட்டித்து வழங்குமாறும் மற்றும் இந்த மாதிரி மாஸ்டர் பிளான் அனைத்து தரப்பு மக்களையும் சென்றடையும் வகையில் பெரிய அளவில் தினசரி செய்தித்தாள், ஊடகங்கள், ஒலிபெருக்கி மூலம் மேலும் விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டும் என நிலவணிகர் நலச்சங்கத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு அந்த கோரிக்கை மணியில் குறிப்பிடப் பட்டுள்ளது. தொடர்ந்து எம்எல்ஏ நாஜிம் கூறுகையில், இந்த மனு நில வணிகர்களின் நியாயமான மனு எனவே இது குறித்து மாவட்ட கலெக்டர் விரைவான நடவடிக்கை எடுப்பார் என நம்புகிறோம் என்றார்.

# கார்த்திகை மாதம் முதல் நாளில் மாலை அணிந்து விரதம் தொடங்கிய ஐயப்ப பக்தர்கள்



விழுப்புரம், நவ. 16–

விழுப்புரம் மாவட்டம் காணை கிராமத்தில் உள்ள ஐயப்பன் கோவிலில் கார்த்திகை முதல் நாளான இன்று சபரிமலை செல்வதற்கு ஐயப்பக்தர்கள் மாலை அணிந்து விரதம் தொடங்கினர்.

இதனால் கோயில்களில் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. மண்டல மகரவிளக்கு பூஜைக்காக சபரிமலை செல்லும் பக்தர்கள் கார்த்திகை 1ம் தேதி மாலை அணிந்து விரதம் தொடங்குவது வழக்கம்.

இன்று கார்த்திகை மாதம் பிறந்ததால், காணையை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பல்வேறு கோயில்களில் ஏராளமான பக்தர்கள் தங்களின் இஷ்ட தெய்வங்களை வணங்கி அருகில் உள்ள கோவில்களுக்கு சென்று குருசாமியிடம் கோவில் குருக்கள் முன்னிலையில் பயபக்தியுடன் சரண கோஷம் முழங்க மாலைகளை அணிந்து கொண்டனர்.

# அலைடு ஹெல்த் சயின்ஸ் துறையில் உலக கதிரியக்க தினம் கொண்டாட்டம்




சேலம், நவ. 16–

விநாயகா மிஷனின் விம்ஸ் மருத்துவமனை வளாகத்தில் உள்ள அலைடு ஹெல்த் சயின்ஸ் துறையில் உலக கதிரியக்க தினம் கொண்டாட்டம் மற்றும் செயல்முறை விளக்க நிகழ்வு நடந்தது.

மருத்துவ துறையில் கதிரியக்கவியல் பிரிவின் முக்கியதுவத்தை அனைவருக்கும் உணர்த்தும் பொருட்டும் கதிர்கள் கண்டுபிடிக்கப்பட்டதை நினைவுகூறும் வகையிலும் ஆண்டுதோறும் நவம்பர் மாதம் உலக கதிரியக்க தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இதனை முன்னிட்டு விநாயகா மிஷனின் விம்ஸ் மருத்துவமனை வளாகத்தில் உள்ள அலைடு ஹெல்த் சயின்ஸ் துறையின் கதிரியக்கவியல் பிரவின் மூலம் இத்தினம் கல்லூரி வளாகத்தில் கொண்டாடப் பட்டது. நிகழ்ச்சிக்கு துறையின் டீன் பேராசிரியர் டாக்டர்.செந்தில்குமார் முன்னிலை வகித்து நிகழ்ச்சியினை தொடக்கி வைத்து இத்தினம் கொண்டாடப்படுவதன் நோக்கம் மற்றும் கதிரியக்கவியலாளர்களின் மருத்துவ பங்களிப்பு அவர்களுக்கான வேலைவாய்ப்புகள் குறித்து எடுத்துரைத்தார். சிறப்பு விருந்தினராக விம்ஸ் மருத்துவமனையின் கதிரியக்கவியல் சிகிச்சை பிரிவின் ஆலோசகர் டாக்டர்.முரளி கணேஷ் பங்கேற்று கதிரியக்க பாதுகாப்பு குறித்து சிறப்புரை ஆற்றினார். மேலும் விம்ஸ் மருத்துவமனையின் மூத்த கதிரியக்க சிகிச்சை தொழிற்நுட்பவியலாளர் ஜெயவேல் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

தொடர்ந்து பெள்ளாச்சி அரசு மருத்துவமனையின் மூத்த தொழிற்நுட்பவியலாளர் சிவரஞ்சன் மற்றும் சேலம் ரேட் க்யூ தொழிற்நுட்ப மேலாளர் பிரகாஷ் ஆகியோர் பயிற்சியாளர்களாக பங்கேற்று கதிரியக்க சிகிச்சை உபகரணங்கள் மற்றும் கருவிகள் சார்ந்த செயல்முறை பயிற்சியினை வழங்கினர். முடிவில் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது. மேலும் இச்சிறப்பு தினத்தில் துறையை சேர்ந்த மாணவர்கள் கல்லூரியில் நோய்கண்டறிதல் பயிற்சி சார்ந்த மையத்தை அமைத்திருந்தனர். இதனை துறையின் டீன் மற்றும் சிறப்பு விருந்தினர் திறந்து வைத்தனர். இதன் முக்கிய நோக்கம் மருத்துவ பயிற்சி தொடர்பான திறனையும் அனுபவத்தையும் வழங்குவதே ஆகும். தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடந்தப்பட்டன. இதற்கான அனைத்து ஏற்பாட்டினையும் துறையின் கதிரியக்கவியல் பிரிவு பொறுப்பாளர் பேராசிரியை கலைவாணி, உதவி பேராசிரியர்கள் ஆண்டனி ரூபன், அல்போன்ஸ், ஆண்டனி காட்ஸன், தங்ககுமரன் மற்றும் நிஷா ஆகியோர் செய்திருந்தனர்.

# 3வது பொதிகை புத்தக திருவிழா துவக்கம்




தென்காசி, நவ. 16–

தென்காசி இ.சி.ஈஸ்வரன்பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளி வளாகத்தில் 3வது பொதிகை புத்தக திருவிழாவின் துவக்க விழா நடந்தது. மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் ராணிஸ்ரீகுமார், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு பாடநூல் கழகம் கல்விச்சேவைகள் கழகம் சங்கர் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனிநாடார், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ராஜா, வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன்திருமலைக்குமார் ஆகியோர் முன்னிலையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன் துவக்கி வைத்து பார்வையிட்டார்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com Ph : 0413-2226989, 9842335007